பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**26 04 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மேற்கு வங்கத்தில் இறுதிகட்ட வாக்குப் பதிவு நடைபெறும் 142 சட்டப்பேரவைத் தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

2. விவசாயிகள் நலனுக்கு அதிக முன்னுரிமை அளித்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. வட மாநிலங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. ஈரானுடன் நடைபெறவிருந்த இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை ரத்தாகி இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா நேற்று ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்கு வங்கத்தில் இறுதிகட்ட வாக்குப் பதிவு நடைபெறும் 142 சட்டப்பேரவைத் தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

இந்தத் தொகுதிகளில் பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைய உள்ள நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, ஜமால்பூரில் நேற்று நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், மாநிலத்தில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால் அரசுப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றார்.

பிஜேபி ஆட்சியமைத்தால் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என்று கூறினார்.

ஹூக்ளியில் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர் திரு. ராஜ்நாத் சிங், மகளிருக்கு மாதம் மூவாயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்றும், காலியாக உள்ள அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் உறுதியளித்தார்.

உத்தர்பாராவில் பிரச்சாரம் மேற்கொண்ட திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி,

ஒட்டுமொத்தமாக மத்திய அமைச்சர்களையும், பிஜேபி முதலமைச்சர்களையும் தேர்தல் பிரச்சாரத்தில் பிஜேபி ஈடுபடுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத்திட்டங்களின் காரணமாக திரிணாமுல் காங்கிரஸே மீண்டும் ஆட்சியமைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஸ்ரீராம்பூரில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, மத்திய அரசும், மேற்குவங்க மாநில அரசும் மக்கள் நலனில் அக்கறை கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் போல செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய இடதுசாரி முன்னணி அரசும், தற்போதைய திரிணாமுல் காங்கிரஸ் அரசும் மேற்குவங்கத்தில் தொழில்துறை வளர்ச்சியை சிதைத்துள்ளதாக திரு. ராகுல் காந்தி குறை கூறினார்.

இதனிடையே மேற்குவங்கத்தில் இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் முதல் முறையாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட ட்ரோன்கள் பயன்படுத்தப்படுவதாக அந்த ஆணையம் கூறியுள்ளது.

இது தவிர 2 ஆயிரத்து 321 கம்பெனி மத்தியப் படைகளும், 142 பொதுப் பார்வையாளர்களும், 100 செலவின பார்வையாளர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் மட்டும் 273 கம்பெனிகளைச் சேர்ந்த மத்தியப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

விவசாயிகள் நலனுக்கு அதிக முன்னுரிமை அளித்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசம் விதிஷா பகுதியில் கோதுமை கொள்முதல் தொடர்பான நடவடிக்கைகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகள் தங்களது விலைபொருட்களை விற்பனை செய்வதில் எந்த

இடையூறையும் சந்திக்க கூடாது என்பதில் அரசு உறுதியுடன் உள்ளது என்றார்.

கோதுமை விவசாயிகளுக்கு அனைத்து வசதிகளையும் அரசு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரபி பருவத்தில் கொள்முதல் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யுமாறு மாவட்ட ஆட்சியர்களை திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

வட மாநிலங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, பஞ்சாப், ஹரியானா, சண்டிகட், ஹிமாச்சலப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கட் மற்றும் ஜம்மு-கஷ்மீரில் இன்று வெப்பநிலை கடுமையாக உயர வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

வெப்பநிலை அதிகரிக்கக் கூடும் என்பதால் மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சில அறிவுறுத்தல்களை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

இதனிடையே அசாம், அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த சில நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

கனமழை எச்சரிக்கையை அடுத்து குவஹாத்தியில் அசாம் மாநில தலைமைச் செயலாளர் திரு. ரவிகோட்டா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாநிலத்தில் 300 இடங்களில் நிலச்சரிவு அபாயம் உள்ளதாகவும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

குஜராத்தில் உள்ளாட்சித் தேர்தல் சற்றுமுன் தொடங்கியுள்ளது.

**15** மாநகராட்சிகள், **84** நகராட்சிகள் மற்றும் **34** மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு இன்று தேர்தல் நடைபெறுகிறது.

இத்தேர்தலில் சுமார் **8** ஆயிரம் பதவிகளுக்கு **25** ஆயிரம் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

**4** கோடியே **8** லட்சம் வாக்காளர்கள் இதில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாலை **6** மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

நாளை மறுநாள் வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

<<<<>>>>

ஈரானுடன் நடைபெறவிருந்த இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை ரத்தாகி இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க அமெரிக்காவுடன் பேச்சு நடத்த ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி நேற்று பாகிஸ்தான் சென்றார்.

எனினும் அவர், பாகிஸ்தான் பிரதமர் மற்றும் பாகிஸ்தான் ராணுவ தளபதி ஆகியோரை சந்தித்த பின்னர் அந்நாட்டில் இருந்து வெளியேறினார்.

அமெரிக்க தரப்புடன் நேரடியாக பேச்சு நடத்த முடியாது எனவும், பாகிஸ்தான் மூலமாகவே பேச்சு நடத்தப்படும் என்றும் ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான அமெரிக்கப் பிரதிநிதிகளை பாகிஸ்தானுக்கு அனுப்பப்போவதில்லை என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஈரானுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை பயனற்றது என்றும், ஈரான் எப்போது விரும்புகிறதோ அப்போது அழைக்கலாம் என்றும் திரு. ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த விருந்தின்போது அடையாளம்

தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதையடுத்து அதிபர் திரு. ட்ரம்ப் உள்ளிட்டோர் காயமின்றி பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா நேற்று ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் **10** மீட்டர் ஏர்-பிஸ்டல் பிரிவில் கலப்பு குழு பிரிவில் வன்ஷிகா - சிராக் ஷர்மா இணை தங்கம் வென்றது.

இதே பிரிவில் இந்தியாவின் மோகினி சிங் - ரானா ஹிமான்ஷு இணை வெண்கலம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **5** தங்கம், **5** வெள்ளி, **4** வெண்கல பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

------------

உபேர் கோப்பை பேட்மிண்டன் இறுதிப் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியா - யுக்ரைனை வென்றது.

டென்மார்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா **3-0** என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

நாளை நடைபெறும் அடுத்த சுற்று போட்டியில் இந்தியா - சீனாவை எதிர்கொள்கிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி - சென்னை அணியை வென்றது.

ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் அந்த அணி **4-1** என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெங்களூரு - மும்பை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மற்றொரு ஆட்டம் டிராவில் நிறைவடைந்தது.

-------------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான **4**வது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **14** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஜோகன்னஸ்பர்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 185 ரன் எடுத்தது.

186 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் 3-1 என்ற கணக்கில் தென்னாப்பிரிக்கா முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 5வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி நாளை Benoni-யில் நடைபெற உள்ளது.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 228 ரன் எடுத்தது.

229 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஹைதராபாத் அணி 18 புள்ளி 3 ஓவரில் வெற்றி இலக்கை எட்டியது.

முன்னதாக தில்லியில் நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பஞ்சாப் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

இப்போட்டியில் முதலில் களமிறங்கிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 264 ரன் எடுத்தது.

265 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி 18 புள்ளி 5 ஓவரில் வெற்றி இலக்கை எட்டியது.

சென்னையில் இன்று நடைபெறும் போட்டியில் சென்னை அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

இன்று லக்னோவில் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் லக்னோ அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

இதனிடையே சென்னையில் இன்று நடைபெறும் போட்டியைக் காண செல்பவர்கள் ஸ்பான்சர் செய்யப்பட்ட பயணச் சீட்டுகளைப் பயன்படுத்தி அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு கட்டணமின்றி பயணிக்கலாம் என்று சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

**<<<<The End>>>>**